# ADM COURT, SANKARANKOVIL

## தேதி 07.08.2026

## அசல் வழக்கு எண். 16/2015

**வா.சா. 2 (கமலா)மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இவ்வழககில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. இவ்வழக்கு யாரால் யாருக்கு எதிராக தாக்கல் செய்ய்பபட்டுள்ளது என்றால் பெருமாள் மற்றும் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் மின்னல்கொடிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் நான்குமால் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் சர்வே எண்.1354/1 ஆகும். வழக்கு தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் சொன்னதன்பேரில் அந்த விபரங்கள் தட்டச்சு செய்யப்பட்டன என்றால் நான் கூறியதன்பேரில் தட்டச்சு செய்யப்பட்டன. வழக்கு தாவா சொத்து மின்னல்கொடிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அது அவரது தாத்தா சொத்து. வழக்கு தாவா சொத்து பொறுத்து வாதியின் வழக்கிற்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பட்டாவை பார்த்துள்ளேன். வழக்கு தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மின்னல்கொடி பெயரில் உள்ளது. வழக்கு தாவா சொத்து வீடாக உள்ளதா அல்லது காலிமனையாக உள்ளதா என்றால் வீடாக உள்ளது.

3. வழக்கு தாவா சொத்திற்கும் எனக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 20 அடி இருக்கும். வாதி மின்னல்கொடியும், நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள். வாதி மின்னல்கொடி எனது வீட்டில் வேலை பார்த்தவர் என்பதால் அவர் அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாவா சொத்திற்கு வடக்குபக்கம் சப்பாணி மாடசாமிகோவில் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு தாவா சொத்திற்கு மேற்குப்பக்கத்தில் சப்பாணி மாடசாமி கோவில் உள்ளது. அந்த கோவில்

அருந்ததியர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்றால் சரியல்ல. அது ஊருக்கு பொதுவான கோவில். பெருமாள் மற்றும் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் அருந்ததியர் சமுதாய நாட்டாண்மைகள் என்றால்சரிதான். வழக்கு தாவா சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்ணில் சர்க்கார் புறம்போக்கு இடம் உள்ளது என்றாலும், அந்த விபரத்தை மறைத்து வாதிக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**